RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22361

OPEN ACCESS

# பழங்குடியினர் பண்பாடு மற்றும் தொழில் முறைகள்

ஏ. தீபா [அ, *], பொ .வெங்கடேசன் [அ]

[அ] தமிழ்த்துறை, கந்தசாமி கண்டர் கல்லூரி, பரமத்தி வேலூர், நாமக்கல், தமிழ்நாடு, இந்தியா

# Indigenous People's Culture and Livelihood Practices

Y. Deepa [a, *], P. Venkatesan [a]

[a] Department of Tamil, Kandasami Kandar's College, Namakkal, Tamil Nadu, India

* Corresponding Author: deepavijay714@gmail.com

Received: 08-04-2022
Revised: 28-06-2022
Accepted: 11-07-2022
Published: 30-07-2022

Check for updates

## ABSTRACT

Researchers who describe culture as a clash of dual oppositions are yet to pass the era of gathering data to support their arguments. In contemporary times, the most frequently referenced opposing forces can be termed mainstream culture and marginal culture. It cannot be said that there is a single culture for the entire population living within the geographical areas divided for administrative convenience such as world, country, state, district, block, and village; therefore, such arguments cannot be dismissed as meaningless or unnecessary. In this context, it is essential to document the cultural lifestyles of the indigenous people of Tamil Nadu and the occupations they pursue. Hence, this article is structured to explore the culture and occupational practices of indigenous people.

**Keywords:** Indigenous People, Culture, Livelihood Practices

## முன்னுரை

எழுசினர், தாழ்ந்தோர் எனக் கூறி ஒதுக்கப்பட்ட மக்கள் இன்று தலித் என்ற சொல்லால் குறிக்கப்படும் படி உறுதி செய்துள்ளனர். மாறுபாடுகள் இருந்த போதும் கிடைக்கும் பலனை உத்தேசித்து அப்படி குறிப்பதை பல இயக்கங்களும் ஏற்றுக் கொண்டு விட்டன. ஊடகங்களும் அவ்வாறே குறிக்கின்றன. பொதுவாக ஊடகங்கள் அரசு அதிகாரத்தின் சார்பானவை என்ற போதிலும் அரசு அதிகாரத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கவும் ஆலோசனை சொல்லவும் உரிமை உள்ளது என நம்பும் ஓர் அமைப்பு, இன்று தொலைக்காட்சி ஊடகங்களாகவும் திரைப்பட ஊடகங்களாகவும் மாறி நின்ற போதிலும் அச்சு ஊடகங்கள் கொண்டிருந்த அந்த நெறிகளையும் நோக்கங்களையும் ஊடகங்கள் முற்றிலுமாக கைவிட்டு விட்டனர் என்று சொல்வதற்கில்லை. தகவல் சொல்லுதல், அறிவூட்டல், கலிப்பூட்டுதல் என்ற அடிப்படை நோக்கங்கள் வழியே ஊடகங்கள் ஜனநாயக அரசியலுக்கு ஏற்ப தேச மக்களை தகவமைப்பும் பணியை செய்கின்றன.

தமிழ்நாட்டின் 13 மாவட்டங்களில் அடியன், அறநாட்டன், இருளர், ஏரவள்ளன், ஊராளி, கம்மாரா, கனியன், காட்டுநாயக்கன், காடார், காணிக்காரன் கூடிய மேலங்குடி கொச்சை வேலன் கொண்ட காப்பு, கொண்டார செட்டி, கோமகன், கோத்தர், தோடர், குறிக்கண், குறும்பர், குறும்பன், சோழகர், மலையரையன், மலைப்பண்டாரம், மலைவேடன் மலைக்குறவன், மனச மகாமுலசர், மலையாள முதுவா, முத்துவன், பறையன் பளியன், பள்ளியர், பனியன், இருளர் என 36 குடிகள் வாழ்வதாக அரசின் புள்ளி விவரங்கள் சொல்கின்றனர். அச்சு ஊடகங்கள் உருவாக்கிய இந்த கருத்தும் கூட ஐரோப்பிய மைய சிந்தனையின் வெளிப்பாடுதான். நேஷனல் ஜியாக்ராம், அனிமல் பிளானட், டிஸ்கவரி போன்ற தொலைக்காட்சி ஊடகங்கள் இன்றும் இதே கருத்தோட்டத்துடன்

பழங்குடியினரையும் பழங்குடி பண்பாட்டையும் அவற்றின் பார்வையாளர்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தன. ஐரோப்பியர்களை தவிர அனைவருக்கும் பண்பாடற்றவர்கள் என்று கருதி அவர்களின் மேல் தங்கள் பண்பாட்டை திணித்து விட வேண்டும் என்று கருதிய மனோபாவம் பின் காலனிய காலத்திலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தமிழ் திரைப்படங்களில் முழுமையாக பழங்குடி பிரதேச பின்னணியுடன் வந்த படங்கள் என சிலவற்றை சொல்ல முடியும். மலைச்சாரல், சோலை கிளி, நிலா பெண்ணே போன்ற பெயர்களில் வந்த அந்த திரைப்படங்கள் அதிலும் பழங்குடியினரின் ஒட்டுமொத்த வாழ்வையும் பண்பாட்டும் கூறுகையோ காண முடியாது. இம்மூன்று படங்களிலும் இருக்கும் ஒரு ஒற்றுமை என்னவென்றால் அப்படங்களின் நாய்கள் பழங்குடி பெண்களாக இருந்தது தான் நகரத்திலிருந்து வரும். நாயகனின் மனதை கவர்ந்த உடலளவு கொண்ட பெண்ணாக இருந்த அவளை கதாநாயகன் காதலித்து காதலை நிறைவேற்ற படாத பாடுகளை சந்திப்பதாக கதை பின்னப்பட்டிருந்தன.

மாறிவரும் உலகச் சூழலில் மலைவாழ் மக்களின் வாழ்வாதாரங்களை வேட்டையாடும் பன்னாட்டு கம்பெனிகள் அவர்களை வரவேற்கும் பேரரசுகள் அவற்றை கண்டு கொள்ளாமல் இருக்கும் நடுத்தர வர்க்க மனோபாவம் என்ற தளங்களிலும் நுழையும் தன்மையால் நிகழ்கால நாடகமாக நிகழ்த்தி காட்டப்பட்டது. நாடகம் நிகழ்த்தப்பட்ட விதத்தில் பல குறைபாடுகள் இருந்த போதும் பழங்குடியினர் பண்பாட்டை ஒரு அகத்தாரின் பார்வையில் பேசிய வகையில் அந்நாடகம் குறிப்பிடத்தக்க நாடகம் என்றே சொல்ல வேண்டும்.

## பண்பாடு - விளக்கம்

பண்பாடு என்பது மரபு வழியில் அமையப்பெறும் நடத்தை முறைகளின் தொகுதி ஆகும். மனித இனம் வளர்ந்தெடுத்து வருகின்ற இப்பண்பாடானது ஒவ்வொரு தலைமுறையினராலும் கற்று மற்ற தலைமுறையினருக்கு விடப்படுவதாகும் தனித்த ஒரு பண்பாடு என்பது பல கட்டங்களை கொண்டதாகும். மரபு வலியான நடத்தை முறைகளின் தொகுப்பாக உள்ள பண்பாடு ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு உரியதாக ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிலை பெறுவதாக அமையக்கூடும் என்று மார்கரட் மீடு என்ற அறிஞர் விளக்குகிறார்.

பண்பெனப்படுவது, கற்பிக்கப்படுவது, தகவமைவது, குறியீட்டு நடத்தை முறையாக அறிவது, இவை யாவும் முழுமை பெற்ற மொழியானாலும் தொழில்நுட்ப கண்டுபிடிப்பாலும் பலதரப்பட்ட திறன்களாலும் உள்ளடக்கிய சமூகங்கள் இடையே பரிமாற்ற முறைகளை ஒழுங்கமைத்து செயல்படுவதாகும் என்று ஆடம் கூப்பர் என்னும் அறிஞர் குறிப்பிடுகிறார்.

பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டம் தனது சமூக வரலாற்று வளர்ச்சியினடியாக தோற்றுவித்த பௌதீக பொருட்கள் ஆத்ம யாத்தகம் கருத்துக்கள் நடைமுறைகள் சமூகப் போதுமானங்கள் ஆகியவற்றினாலும் அமைந்த அமைப்பு.

## தமிழகப்பழங்குடிகளின் தொழில்முறைகள்

மேற்கு மலைத்தொடரில் ஏராளமான சமூகப் பிரிவு பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இருளர், சோழர், காடர், கசவர், முதுவர், மலசர், ஊராளி, ஏறவாளர், தொடர், கோத்தர், காட்டுநாயக்கர், குறும்பர், வன்னியர், பழியர், புலையர், காணிகாரர், மலையாளி என பழங்குடி மக்கள் உயர்ந்த குளிர் நிறைந்த நீலகிரி முதல் குமரி வரை கோவை முதல் திருவள்ளூர் மாவட்டம் வரை விரிந்து பறந்து நிற்கும் மலைகளின் மக்களாக வாழ்ந்து வருகிறார்கள். தமிழக மழை தொடர்களை சேர்த்தார் போல் உள்ள கேரளா, கர்நாடகா ஆந்திரா மாநில மலைகளிலும் பழங்குடி மக்கள் நிறைந்து வாழ்கின்றார்கள்.

கிழக்கு மலைத் தொடரில் மலையாளி பழங்குடி மக்களே நிறைந்து காணப்படுகின்றனர். மலைமீது பழங்குடி மக்கள் வாழும் ஊர்கள் நிறைந்து காணப்படுகின்றன. அவர்களை ஒட்டி வனங்களில் மலையடிவாரங்களில் இருளர் மக்கள் வாழ்கிறார்கள். தமிழக மலைத்தொடர்களை

சேர்த்தார் போல் உள்ள கேரளா, கர்நாடகா, ஆந்திரா மாநில மலைகளிலும் பழங்குடி மக்கள் நிறைந்து வாழ்கிறார்கள்.

சமவெளிப் பகுதிகளில் சிதறிய நிலையில் கனியான் மலைவேடன் மலைக்குறவன் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

புலம்பெயர்ந்து நாடோடி பழங்குடிகளாக தமிழகத்தில் குடியேறிய நரிக்குறவர்களையோ காய்கறி சிக்காரி நாடோடி பழங்குடிகளாக வந்து பின்னர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் குடியமர்ந்துள்ள லம்பாடிகளுக்கு சுகாளி, பஞ்சாரா, பழங்குடி மக்களுக்கான அங்கீகாரத்தை அரசு இன்றும் வழங்கவில்லை.

அரசால் அங்கீகரிக்கப்பட்ட பழங்குடி மக்கள் தொகை 2001 ஆம் ஆண்டு கணக்குப்படி, தமிழகத்தில் 651321 என அரசு கூறுகிறது. ஆனால் இந்திய குடிமக்கள் மக்கள் தொகை பட்டியலில் இடம்பெறாத பழங்குடியினர் ஏராளமானோர் இருக்கின்றார்கள்.

மலைவாழ் பழங்குடி மக்களில் ஒரு பகுதியினர் இன்றும் வேளாண் தொழில்முறையறியாத தொல் பழங்குடியினராக உள்ளனர். இவர்கள் உடல் உழைப்பை செலுத்தி உற்பத்தியில் ஈடுபட பழக்கப்படுத்திக் கொள்ளாமல் இயற்கை தந்த உணவை காய் கனி கிழங்குகளை உணவாக உண்டு வாழும் தொல் பழங்குடியினராக இருக்கிறார்கள். சில பகுதிகளில் கற்குகைகளில் வாழும் பழங்குடியினரும் சில இடங்களில் இருக்கின்றனர்.

பெரும்பாலான மலைவாழ் பழங்குடி மக்கள் மலைப்பகுதிகளில் சொற்ப நிலங்களில் சாகுபடி செய்கிறார்கள். முன்பெல்லாம் கொத்துக்காடுகள், புனல் காடுகள் என இருந்தன. புனல் காட்டு சாகுபடி முறையில் வனம் அழிந்து விடுவதாக கூறி அரசு தடை விதித்து விட்டது. இருக்கும் மழை நிலங்களில் மிகப்பெரும் பகுதிகளில் புஞ்சை பயிர்களை பயிரிடப்படுகின்றன. மழை நெல், மழை வாழை, பலா போன்றவைகளை சாகுபடி செய்கிறார்கள்.

ஆரியம், கேழ்வரகு, திணை, சோளம், அவரை போன்ற புஞ்சை தானியங்களை அதிகம் இவைகளை விளைவிக்க இரவு பகலாக காவல் புரிய வேண்டும். பகலில் கால்நடையில் இருந்தும் பறவைகளிடமிருந்தும் பாதுகாக்க வேண்டும். இரவில் வன விலங்குகளிடமிருந்து பாதுகாக்க வேண்டும். இரவெல்லாம் கண் விழித்து சப்தமிட்டும் குரல் கொடுத்தும் பாடியும் இருப்பார்கள். எவ்வளவு சிரமப்பட்டு விளைத்தாலும் வனவிலங்குகள் அழைத்தது போக கிடைக்கும் தானியம் காலாண்டுக்கு கூட போதுமானதாக இல்லை.

மற்ற நாட்களில் வன விலை பொருட்களை நம்பியே காலத்தை ஓட்டுகிறார்கள். பெரும்பகுதியான காலங்களில் மூன்று வேளை உணவு என்ற சூழ்நிலையே இல்லை. இயற்கை வளங்களில் வாழும் பழங்குடி மக்கள் தேன் எடுத்தல், நிலத்தினை அகழ்ந்து கிழங்கு எடுத்தல், காடுகளில் கிடைக்கும் காய்கறிகளை உணவாக்கிக் கொள்ளுதல் போன்றவைகள் மூலம் வாழ்க்கை நடத்துகின்றனர்.

## ஊர்கள்

மலைவாழ் மக்கள் தங்கள் குடியிருப்பு உள்ள பகுதிகளை ஊர்களை பலவிதமாக அழைக்கின்றனர். ஒவ்வொரு பழங்குடி சமூகப் பிரிவும் வேறு வேறு பெயர்களில் தங்கள் ஊர்களை அழைக்கின்றார்கள்.

இருளர் பழங்குடி மக்கள் தங்கள் ஊர்களை பதி என்று அழைக்கின்றார்கள். பல்வேறு பெயர்களை இணைத்து கூறினாலும் இறுதி சொல் பரி என்றே வருகிறது. புஞ்சைப்பதி, பூலப்பதி, நீலாம்பதி, திருப்பதி மற்றும் பல இடங்களில் முத்தூர் எனவும் பெயரிடுகின்றனர். உதாரணமாக புண்ணியன் முத்தூர், கோயமுத்தூர், கணியன் முத்தூர் என்று அழைக்கும் வழக்கம் உள்ளது. (தட்சிணாமூர்த்தி. அ 2019)

தொடர்களில் இடம் வந்து எனவும், மலசர் பாடி என்றும், காடர் பற்றி என்றும், கோத்தர் கோக்கள் என்றும், லம்பாடி தண்டா என்றும், மலையாளிகள் ஊர் என்றும், சில ஊர்களை சேர்த்து நாடு என்றும், ஊர் பெயர்களை கூறும் வழக்கம் உள்ளது.

## மொழி

பழங்குடி மக்களின் பல்வேறு சமூகப் பிரிவினரின் தனித்தனி மொழியில் பேசுகின்றனர். மழையில் வாழும் பழங்குடியினர் பேசும் மொழிகளில் மூங்கொலி அதிகம் காணப்படுகின்றது. இம்மொழிகள் திராவிட மொழி குடும்பத்தைச் சேர்ந்ததாகவே உள்ளது. மலையாளி பழங்குடியினர் தமிழையே பேசுகிறார்கள். மற்ற பழங்குடியினர் பேசும் மொழிகள் அனைத்தும் வேர்ச்சொற்கள் தமிழாகவே உள்ளன. பழம் தமிழ் சொற்கள் பல சிதையாமல் பழங்குடியினர் இடையே காணப்படுகிறது. ஆனால் வரி வடிவம் இல்லாத இப்பழங்குடி மொழிகள் அழிவின் விளிம்பில் நிற்கின்றன. பழங்குடியினர் மொழி மொழியியல் ஆய்வாளர்களுக்கு புதிய வெளிச்சத்தை மொழி வளர்ச்சியின் போக்கை அறிய உதவும்.

## வழிபாடும் நம்பிக்கையும்

பழங்குடியினர் இயற்கையை வழிபடும் பழக்கம் உள்ளவர்கள் தங்களை வாழ வைக்கும் மலையும் வனமும் தெய்வங்களாக போற்றுகின்ற பண்பாடு இவர்களிடம் காணப்படுகிறது. காற்றையும், மழையையும், இடியையும் இவர்கள் வழிபடுகின்றனர். அச்சமும், அறியாமையும், பழமை நம்பிக்கையும், இவர்களிடம் காணப்படுகிறது. பலம் பொருந்திய சக்தி வாய்ந்த யானை மற்றும் விலங்குகள் வந்தால் அச்சத்தினால் வழிபட்டு பழகிப்போன பழங்குடி மக்களுக்கு இந்த விலங்குகளும் தெய்வங்களே. பண்பாடு என்பது கற்பதும், பகிர்ந்து கொள்வதுமாகும், ஒரு தலைமுறையினர் கற்றவற்றை பின்வரும் தலைமுறையினர் பெற்றுக் கொண்டு அவர்கள் தம் தலைமுறையில் மேலும் புதியனவற்றைக் கற்கின்றனர். இதனால் பண்பாடு தொடர்ச்சியான மாறுதலுக்கு உட்படுகிறது என்ற மானுடவியல் அறிஞர் மொழியில் பண்பாட்டு ஆராய்ச்சி அறிஞருருமான பேராசிரியர் பக்தவச்சல பாரதி அவர்கள் விளக்குகின்றார். (பக்தவத்சல பாரதி 2015)

பிடரி கேன்சல் அவர்களின் மனித குலத்தோற்ற வளர்ச்சியை பற்றி அறிவியல் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்துள்ளார் மார்கன் அவர்களின் ஆழ்ந்த ஆய்வு மனித குல வளர்ச்சியின் கட்டங்களை வெளிப்படுத்துகிறது இவ்விரு அறிஞர்களின் ஆய்வு பண்டைய மக்கள் மக்களாக இருந்து மக்கள் நிலைக்கு பரிணமித்த முறையை பழங்குடி மக்களின் பண்பாட்டு வாழ்க்கை முறையை அறிவியல் பூர்வமாக விளக்குகிறது.

தொல்காப்பியம், திருக்குறள், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்று பத்து, கழித்தொகை, அகநானூறு, புறநானூறு, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருளாதாரற்றுடை,, திருமுருகாற்றுப்படை மதுரை காஞ்சி, முல்லைப்பாட்டு போன்ற பல இலக்கியங்களிலும் பழங்குடியினர் பற்றிய வாழ்வும் அவர்தம் பண்பாடும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மனித சமுதாயமும் சில உயர் பண்புகளைப் போற்றி பாதுகாத்து வளர்ந்து வருகிறது. ஆனால் வெறும் லாப நோக்கத்தோடு மட்டும் செயல்படும் பெரும் பொருள்படைத்தோரிடம் உயர்ந்த மரபுகளை பண்புகளை கடைபிடிக்கும் போக்கு காணப்படுவதில்லை. பண்பட்ட சமூகத்தின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து நிற்கும் பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெற்று அனைத்து வசதி வாய்ப்புகளும் நிறைந்து பெற்றவர் ஆயினும் பண்பில்லாதவர்களை உயர்ந்தவர்களாக மனித சமுதாயம் ஏற்பதில்லை. ஆனால் வாழ்க்கை தரத்தை விட வாழ்வின் தரம் செழுமை உடையதாகவே இருந்ததாலே சிறந்த மனிதன் சமுதாயமாக பரிணமிக்க முடியும்.

## பழந்தமிழரின் கலைகள்

மனித குல வரலாற்றில் மொழி தோன்றாத முன்பு பல்வேறு வகையான முக பாவகங்களாலும் அங்கு அசைவுகளாலும் ஒலி குறிப்புகளாலும் மனிதன் தன் எண்ணங்களை வெளிப்படுத்தினான். இப்படிப்பட்ட வழிபாட்டுத் தன்மை இசை சிற்பம் ஓவியம் நாட்டியம் இலக்கியம் போன்ற உருவாக்கங்களில் காணக் கிடைக்கிறது. தமிழகத்தில் கோயில்களிலும், குகைகளிலும் அமைக்கப்பட்டுள்ள சிற்பங்களும் ஓவியங்களும் அவகாலத்து மக்களின் கலை வளர்ச்சிக்கு சான்றாக உள்ளன. மனிதன் நெருப்பு மூட்டி உணவு சமைக்க கற்றுக் கொண்டமை முதல் கலை எனலாம். பழங்காலத்தில் தமிழ் மக்களைப் பற்றிய சான்றுகள் பல கிடைத்துள்ளன. செங்கல்பட்டு மாவட்டத்தில் பல்லாவரத்துக்கு அண்மையில் கற்களினாலான கோடரிகள், ஒலிகள், சுத்திகள், கரண்டிகள் போன்ற கருவிகள் கிடைத்துள்ளன. இவை அனைத்தும் கரடு முரடானவை. கற்கருவிகளை செம்மையாக செதுக்கி மெறுகிட அக்கால மக்கள் பயின்றுளர். கற்கருவி அன்றி மரத்தாலான ஈட்டி தண்டுகளையும் அவர்கள் செய்தனர். மேலும் சிறுமிகள் விளையாடுவதற்கு என்று மரத்தால் சிறு பானைகளையும் பொம்மைகளையும் செய்தனர்.

புதிய கற்காலத்தில் வாழ்ந்த மக்கள் கற்கருவிகளை ஒழுங்காகவும் வலுவலுப்பாகவும் செதுக்கிறார். இவை படிக்கட்டுகள் என்ற ஒரு வகை கல்லினால் செய்யப்பட்டன. திருநெல்வேலி, மதுரை, திருச்சி, சேலம், செங்கல்பட்டு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் புதிய கற்கால கருவிகள் கிடைத்துள்ளன. பழங்கால எந்திர கற்கள், உரல், உலக்கை, அம்மி, குளவிகள், தீட்டுக்கற்கள், எடை கற்கள் ஆகியன சேலம் மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டன.

## மண்பாண்டக்கலை

மனிதன் தன் அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக் கொண்ட பின் மேலும் தன்னை மேம்படுத்த விரும்பினான். அதன் விளைவாக மண்பாண்டங்கள் உருவாய் என இடை கற்காலத்தின் முற்பகுதியில் அமைந்த புதைக்கூலிகளில் மண்பாண்டம் காணப்படவில்லை. ஏனெனில் மண்பாண்டம் வனையவும் கலையை பிற்பகுதியில் தான் மக்கள் பயின்றனர் கிமு மூன்று அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மௌரியர் அரசர் கால மண்பாண்டங்கள் கற்கையில் கண்டுபிடிக்கப்பட்டன.

## கட்டடக்கலை

மனித குலத்தின் தொடக்க கால இருப்பிடங்களாக பயன்பட்ட அடர்ந்த காட்டுப் புதர்கள் மலைக் குகைகள் ஆகிய வடிவங்கள் மனதில் பதிந்து வளர்ச்சியுற்று பின்னர் மண்குடிசைகளை மாடி வீடுகளை உருவாக்கும் கட்டடக்கலையாக பரிணமித்தது மூன்றாம் நூற்றாண்டில் சுட்ட செங்கற்களால் ஆன கட்டடங்கள் கட்டப்பட்டன என்பதை காவிரிப்பூம்பட்டினத்து அண்மை அகழ்வாய்வு தெரியப்படுத்துகிறது. இன்றைய பலவண வீடுகளும் அடுக்குமாடி கட்டடங்களும் ஆணிவேராக இருப்பது பழங்கால மனிதரின் கட்டடக்கலை எனில் வியப்பேதும் இல்லை. (கந்தையா. சி 1957)

## ஓவியக்கலை

தன் கருத்துக்களை பிறரோடு பகிர்ந்து கொள்ள முதலில் ஓவியத்தை வரைந்த மனிதன் காலப்போக்கு தன் வீட்டு சுவர்களின் மேல் வேட்டை நிகழ்ச்சிகளையும், நாட்டிய காட்சிகளையும் ஓவியமாக திட்டம் முற்பட்டான் சுவர்கள் மேல் எல்லாம் வண்ண ஓவியங்கள் தீட்டி இருந்ததை சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. நாடக அரங்கிலும் அழகழகான வண்ணங்களில் ஓவியம் தீட்டப்பட்ட திரைச்சீலைகள் தொங்கவிடப்பட்டன. சான்றாக சிலம்பில் காட்டப்படும் நாடக அரங்கில்

'ஒருமுக எலி நீயும் பொறுமுக எழினியும்

கரந்து வரல் எழினியும் புரிந்துடன் வகுத்து'

இருந்ததாக இளங்கோ எழுதிச் செல்வார் பானைகளின் மீது கீற்று ஓவியம் வரையும் பழக்கம் இருந்துள்ளது. (சண்முகம் பிள்ளை. மு. 2004)

## பச்சை குத்தி கொள்ளுதல்

பச்சை குத்தி கொள்ளும் பழக்கம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே இருப்பது முகம் நெற்றி தோல் கை முதலியவற்றில் பச்சை குத்தும் அழகு என்று பழங்குடி மக்களால் கருதப்பெற்றது. கனிதர் இதனை பேரழகு என்று போற்றுகின்றனர். பச்சை குத்துவதை பெண்ணே தனி ஒருத்தியாக செய்கிறாள். கருப்பு வண்ணத்தை முறைபாட்டில் கலந்து ஊசி கொண்டு உடல் தோல் பகுதியில் குத்துவர். தொடர்ந்து ஒரு நாள் விட்டு ஒரு நாள் குத்துவர். பழங்குடி மக்களிடம் இவ்வழக்கம் இன்றும் செல்வாக்கில் உள்ளது. (கே.கே பிள்ளை 2004) வேடர் இனத்தாரிடம் காணப்படுகின்றது. பள்ளர்கள் பற்களால் கட்டிய மாலைகளை விரும்பி அணைகின்றனர். வளர்ந்த இளைஞரை மடியில் கிடத்திக்கொண்டு பெண்கள் முன் பல்லை உடைத்து விடுவர். ஆப்பிரிக்கா ஆஸ்திரேலியா மலய் ஆகிய பகுதிகளிலும் காடரிடமும் பழக்கம் உள்ளது. பழங்காலத்தில் ஆண்கள் தலையில் பூச்சி ஓடுவதும் தலைக்கு முக்காடிட்டுக் கொள்வதும் அழகாக கருதப்பட்டதோடு அவர்களின் வழக்கமாகவும் இருந்தது. தற்காலத்தில் அனைத்தும் நவீனமயமாக்கப்பட்டதால் இப்பழக்கம் மறைந்து போயின.

## முடிவுரை

வேட்டையாடி குகைகளில் வாழ்ந்த மனிதனை விண்வெளியில் பாயும் அளவிற்கு முன்னேற்றிய பரிணாம சக்தி இன்றும் அவனை அறிவொளி மிக்க ஜீவனாகவும் ஆற்றல் மிக்கவனாகவும் மாற்றி வருகின்றது. மண்பாண்டம் அணிதல், நாடகம் இயற்றல், ஒப்பனை செய்தல், இசைக்கச்சேரி போன்றவற்றில் நவீன முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. சான்றாக பச்சை குத்தி கொள்ளல் பழங்காலத்தில் சிறந்ததோர் ஒப்பனையாக கருதப்பட்டது. அது இன்று முகவர்ண பூச்சாகவும் மெகந்தியாகவும் பரிணமித்துள்ளது. காலப்போக்கில் ஏற்ற வளர்ச்சியாய் இருப்பினும் இவை அனைத்தும் பழங்குடி பண்பாட்டின் எச்சங்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## References

Bhaktavatsala Bharti (2015) Cultural Anthropology, Manivasagar Publishing House, Chennai.

Dakshinamoorthy, A. (2019) Tamil Civilization and Culture, Aindhinai Publishing House, Chennai.

Pillai, K.K. (2004) Tamil Nadu History, People and Culture, World Tamil Research Institute, Chennai.

Kandaiya, C (1957) Ancient Tamils before Historical Time, Progressive Publishing House, Chennai.

Shanmugam Pillai, M. (2004) Sangam Tamilar Vazhvil, World Tamil Research Institute, Chennai.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License